## பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளில்

# திராவிட மாடல் அரசு முதலிடம்!

## இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வு அறிக்கையை மேற்கோள்காட்டி 'தி எகனாமிக் டைம்ஸ்' நாளேடு செய்திக் கட்டுரை!

**சென்னை, டிச. 18-**

**பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு முன்னிலையில் உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கையை மேற்கோள் காட்டி 'தி எகனாமிக் டைம்ஸ்' நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**



'தி எகனாமிக் டைம்ஸ்' நாளேட்டில் வெளியான செய்திக் கட்டுரை வருமாறு:-

வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகள், சுற்றுலா வருகை போன்ற மக்கள் தொடர்புடைய பல அளவுகோல்களில் தென்னிந்திய ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடு தெளிவான முன்னிலையில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

**தி.மு.க. அரசுக்கு ஊக்கமாக அமையும்!**

இந்திய மாநிலங்களைப் பற்றிய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்ட சமீபத்திய புள்ளிவிவரங்கள் சமூக ஊடகங்களில் விவாதங்களைத் தூண்டியுள்ளன. தொழில் வல்லுநர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் பொதுமக்கள், தமிழ்நாடு எவ்வளவு வேகமாக முன்னேறி வருகிறது என்பதை சுட்டிக்காட்டுகின்றனர்.

சில மாதங்களில் சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கும் நிலையில், இந்த தரவுகள் தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசுக்கு ஊக்கமாக அமைந்துள்ளன.

2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலா வருகையில் தமிழ்நாடும் கேரளாவும் முன்னிலையில் இருந்தன.

2024-25 ஆம் ஆண்டில் ஏற்றுமதி மதிப்பில் தமிழ்நாடு 52 பில்லியன் டாலரை எட்டியுள்ள நிலையில், கர்நாடகாவை விட சுமார் 22 பில்லியன் டாலர் அதிகமாக உள்ளது.

2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 24 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் இருந்த நிலையில், கர்நாடகாவில் அது 10 லட்சத்திற்கும் குறைவாக இருந்தது.


தளத்தில் ஆரின் கேபிட்டல் தலைவர் மோகந்தாஸ் பாய், கர்நாடகா மூலதனச் செலவினங்களை அதிகரித்து, உற்பத்தித் துறையில் முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்றும், "இலவசங்கள்" சார்ந்த திட்டங்களில் இருந்து விலகி முதலமைச்சர் சித்தராமையா கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

**வேகமாக முன்னேறும் தமிழ்நாடு!**

ஆட்டோமொபைல், மின்னணு, கனரக பொறியியல் மற்றும் தொழில் துறை பல்வகைப்படுத்தல் ஆகியவற்றால் இயக்கப்படும் தமிழ்நாட்டின் தொழில்துறை பரப்பு, கர்நாடகாவை விட வேகமாக முன்னேறி வருவதாகவும் கூறப்படுகிறது.

"இரண்டு ஆண்டுகளில் நிலைமை எப்படி மாறிவிட்டது" என X தளத்தில் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு உற்பத்தி துறையை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சியை எட்டியுள்ளதாகவும், இதனால் மாநிலங்களுக்கிடையேயான வித்தியாசம் பெரிதும் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**சில மாதங்களில் சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கும் நிலையில், இந்தத் தரவுகள் தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசுக்கு ஊக்கமாக அமைந்துள்ளன.**



# RBI Data Show Rosy Picture of TN, Reveal Karnataka's Gaps

Boost to TN's ruling DMK as state is preparing for assembly polls in a few months

Our Bureau

**Bengaluru:** Tamil Nadu has emerged a clear winner among the five southern states across several people-facing parameters that influence the livelihood and quality of life, such as factories, jobs and tourist footfall.

The latest Reserve Bank of India statistics on Indian states have triggered social media discussions with experts, industry leaders and other citizens pointing to the speed with which TN is racing ahead.

The data come as a boost to TN's ruling DMK as the state is preparing for assembly polls in a few months.

In foreign tourist arrivals, both Tamil Nadu and Kerala were ahead in 2024. In exports, at $52 billion, TN was ahead of Karnataka by almost $22 billion in 2024-25. In 2023-24, there were 2.4 million workers in TN as against under 1 million in Karnataka.

In a post on X, Aarin Capital chairman Mohandas Pai said Karnataka will have to invest more in capital expenditure and attract more industry, and urged chief minister Siddaramaiah to focus on investments and industry, away from the "freebies" programme. "Huge corruption in Karnataka is turning off industry, hurting us," he said.

TN's industrial breadth, powered by auto, electronics, heavy engineering and diversification, is visibly outpacing Karnataka's tech-concentration, a user on X said, noting: "How tables have changed from two years ago."

TN chief minister MK Stalin, according to a comment on X by Prasanna Viswanathan, has delivered manufacturing-powered growth to his state in the last two years which has widened the output gap considerably. In 2024-25, TN emerged as the knockout performer by clocking the fastest 16% GSDP growth, as against Karnataka's 12.8%.

Karnataka's former finance secretary LK Atheeq acknowledged TN's progress with a comment on X suggesting that his state must do better in terms of manufacturing, creating jobs and diversifying growth to more regions (something that TN does well).

He was also surprised to find Karnataka at the fifth place in gross enrolment rate in secondary schooling (9th to 12th class) in 2024-25, behind Kerala, TN and Telangana.

THE PEOPLE PICTURE

| | Tourist (domestic, million, 2024) | Tourists (Foreign, lakh, 2024) | Exports (2024-25) (in $ billion) | No of factories (2023-24) | No of workers (2023-24) |
|---|---|---|---|---|---|
| TN | 307 | 11.61 | 52.07 | 40,121 | 24,75,675 |
| Karnataka | 305 | 4.85 | 30.48 | 14,984 | 9,68,922 |
| AP | 290 | 2.62 | 20.78 | 16,011 | 6,35,844 |
| Telangana | 88 | 1.55 | 19.12 | 13,446 | 7,72,749 |
| Kerala | 22 | 7.38 | 4.77 | 7528 | 2,82,993 |

Source: RBI handbook of statistics on Indian States, 2024-25

**கர்நாடகா அமைச்சர் பாராட்டு!**

**2024-25 ஆம் ஆண்டில், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சியில் தமிழ்நாடு 16% வளர்ச்சியுடன் முன்னணியில் இருந்ததாகவும், கர்நாடகா 12.8% வளர்ச்சியை மட்டும் பதிவு செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

கர்நாடகாவின் முன்னாள் நிதிய மைச்சர் எல்.கே. அதீக், X தளத்தில் கருத்து தெரிவிக்கையில், உற்பத்தி வளர்ச்சி, வேலைவாய்ப்புகள் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியை பல பகுதிகளுக்கு பரப்புதல் ஆகியவற்றில் கர்நாடகா இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டிய அவசியம் இருப்பதாக ஒப்புக்கொண்டார். (இதையே தமிழ்நாடு சிறப்பாக செய்து வருகிறது என்றும் அவர் கூறினார்.)

மேலும், 2024-25 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளி (9 முதல் 12 ஆம் வகுப்பு) மொத்த சேர்க்கை விகிதத்தில் கர்நாடகா ஐந்தாம் இடத்தில் இருப்பது ஆச்சரியமாக இருந்ததாகவும், அந்தப் பட்டியலில் கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலங்கானா முன்னிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு 'தி எகனாமிக் டைம்ஸ்' நாளேடு செய்திக்கு கட்டுரை வெளியிட்டுள்ளது.

# திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு – மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் அறிவிப்பு!

*திருவண்ணாமலை, டிச. 18-*

*திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எ.வ.வேலு, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் இன்று (18.12.2025 - வியாழக்கிழமை) காலை 9.30 மணியளவில், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமையில், சட்டப்பேரவை துணைத் தலைவர் பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் ஆர்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில், திருவண்ணாமலை நகரம், 54. திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*இச்செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பகுதி கழக பொறுப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*பொருள் :*

*1. டிசம்பர்26, 27ல், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் வருகை.*

*2.என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" கூட்டம்.*

*3.கழகஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எ.வ.வேலு, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் ஆகியோர் அறிவித்துள்ளார்.*

## புனித பயணிகள் தங்குவதற்கு ஹஜ் இல்லம்!

# வாக்குறுதியை நிறைவேற்றிய முதல்வர்!

## நாகூர் தர்கா ஆதினம் பாராட்டு!

*நாகப்பட்டினம், டிச. 18-*

*ரூ.39.20 கோடியில் ஹஜ் புனித பயணிகள் தங்குவதற்கு ஏற்ப ஹஜ் இல்லம் கட்ட அடிக்கல் நாட்டி இருப்பது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாக்குறு தியை நிறைவேற்றியுள்ளார் என நாகூர் தர்கா ஆதினம் புகழாரம் சூட்டியுள்ளார்.*

*நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் தர்கா பரம்பரை அறங்காவலரும், பரம்பரை ஆதீனமாகிய செய்யது முகமது கலிபா சாகிப் கூறுகையில்,*



*'ஆண்டு தோறும் தமிழ்நாட்டின் பல் வேறு பகுதிகளில் இருந்து வரும் இஸ்லாமியர்கள், ஹஜ் பயணம் செல்வதற்கு ஒரு நாள் முன்னதாக சென்னை வந்து தங்கி விமானத்தில் ஹஜ் பயணம் செல்ல வேண்டும். இந்த புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய மக்களுக்கு உதவும் வகையில் விமான நிலையம் அருகில் தமிழ் நாடு அரசு சார்பில் ஹஜ் இல்லம் கட்டப்படும் என முதல்வர் அறிவித்திருந்தார்.*

*அதன்படி, சென்னை பன்னாட்டு விமான நிலையம் அருகில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.39 கோடியே 20 லட்சம் மதிப்பில் ஹஜ் புனித பயணிகள் தங்குவதற்கு ஏற்ப ஹஜ் இல்லம் கட்டுவதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி இருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. முதல்வர் தனது வாக்குறுதிப்படி, இந்த திட்டத்தை நிறைவேற்றி தந்துள்ளார். இதனை ஒவ்வொரு இஸ்லாமியரும் மன மாற வரவேற்கின்றனர்' என்றார்.*



கரூர் மாவட்டக் கழகம் சார்பில் இளைஞர் எழுச்சி நாள் விழாவை கொண்டாடும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான இறகுபந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகையை மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்.

## மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரைக்கு இன்று வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, டிச. 18–

இன்று மதுரையில் நடைபெறும் கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்க வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வடக்கு மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு கொடுத்து விழாவை சிறப்பிக்க வேண்டும் என மாவட்ட செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

மதுரை வடக்கு மாவட்ட திமுக மேற்கு சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பழங்காநத்தம் பைபாஸ் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அவை தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தனச் செல்வம், வக்கில் பாலாஜி, மாநில இளைஞரணி துணைச் செயலா



ளர் ஜி.பி.ராஜா மாநில விவசாய அணி துணை செயலாளர் கணேசன்,மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் மதுரை பாலா உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரையாற்றிய வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசிய போது இன்று (18.12.2025) வியாழக் கிழமை மாலை மதுரை பழங்காநத்தம் பைபாஸ் சாலையில் நடைபெறும் கிறிஸ்து பிறப்புவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்பதற்காக கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விமான மூலம் மதுரை வருகை தர உள்ளார்

அப்போது அவருக்கு விமான நிலையத்தில் திமுக சார்பில் உற்சாக வரவேற்பு கொடுப்பதுடன், மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் காளவாசல் முதல் விழா நடைபெறும் திடல் வரை கழகத்தினர் ஒன்று திரண்டு கையில் இரு வண்ணக் கொடியுடன் உற்சாக வரவேற்பு கொடுக்க வேண்டும், மேலும் விழாவில் பங்கேற்று விழாவினை சிறப்பிக்க வேண்டும் என்றார்.

மேலும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்துள்ள என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி பரப்புரை பணிகளில் வடக்கு மாவட்ட கழகத்தினர் முழுமையாக ஈடுபட்டு வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குச்சாவடிகளை பலப்படுத்த வேண்டும், இதன்மூலன் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் கழக ஆட்சி அமைவது உறுதி அதற்கு முதல் படியாக மதுரை மேற்கு தொகுதி திமுக வெற்றி பெற்றது என்ற செய்தி வரும் எனவும் அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் காவேரி, எஸ்.வி.சுதன், மதிவெங்கடேஷ், சசி தேவா, மதன் செல்வன், ராஜ கோடி, நாகஜோதி சிவா, ஒன்றிய செயலாளர்கள் வி.பி.திருக்குமரன், ஆர்.கே.ஜெயராமன், பேரூர் செயலாளர் ராசாமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் பரவை மனோகரன், முருகானந்தம் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.




வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை2025 வெள்ளபாதிப்பு கணக்கெடுப்பு மற்றும் பயிர் காப்பீடு குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர், திருமதி ஆர்.ஜெயா, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன், காப்பீட்டு நிறுவன அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.